# கண்மணியாம் பிள்ளைகட்கு என்ன பெயர் சூட்டிடலாம்?

காஜி A.M.M. காதர் பக்ஸ் ஹுசைன் ஸித்தீக்கி M.A.,
டவுன் காஜி, கீழக்கரை

குழந்தை, தாயின் வயிற்றில் உள்ளபோதே பெற்றோர் பிள்ளைக்கு எப்பெயர் சூட்டலாம் என மகிழ்வோடு சிந்திப்பதுண்டு. சிலர் குழுந்தை பிறந்து பல ஆண்டுகள் கடந்தாலும் அதைப்பற்றி சிந்திப்பதில்லை. வேறு சிலர் பிள்ளைக்கு ஏதாவது ஒரு செல்லப்பெயர் சொல்லி அழைத்து அதை நிலைக்கவும் செய்து விடுகின்றனர்.

குழந்தைகளுக்கு அழகிய பெயரிட இஸ்லாம் வலியுறுத்துகின்றது. ஒருவர் வாழ்நாள் பூராவும் பெயருடன் அழைக்கப்பட்டு நாளை மறுமையிலும் பெயர் சொல்லி அழைக்கப்பட வேண்டிய நிலையிருக்கிறார் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். "நியாயத் தீர்ப்பு நாளில் உங்கள் பெயராலும் உங்கள் தந்தையின் பெயராலும் அழைக்கப்படுவீர்கள். எனவே அழகிய பெயரிடுங்கள்" என அறிவுரை பகன்றார்கள். (அபூதாவூத், அஹ்மது). மேலும் இபுனு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்; பெற்றோரின் கடமைகளை அறிந்துள்ளோம். ஆனால் குழந்தைகளுக்கான கடமை என்ன? என எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் வினவிய போது "தந்தை, நல்ல பெயரிடுவதும் நற்கல்வி புகட்டுவதும்" என பதிலளித்தார்கள்.

## நல்ல பெயர்கள்

நற்பெயரிடவும் வழிகாட்டிய வள்ளல் நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான பெயர் அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான் என்றதுடன் . தமதருமைத் தோழர் பலருக்கு அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான் என் பெயரிடவும் செய்தார்கள். எனவேதான் அல்லாஹ்விடம் தமது அடிமைத்தனத்தை வெளிப்படுத்தக்கூடிய அளவில் 'அப்து' என அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுடன் சேர்த்து அப்துர் ரஹீம், அப்துல் காதர், அப்துஸ் ஸமத், அப்துல் கரீம், அப்துல் லத்தீப்... என நாம் பெயர் வைக்கின்றோம். இவ்வாறு பெயரிட்டு விட்டு அல்லாஹ்வின் பெயரையே நேரிடையாக அழைப்பது போன்று ரஹீம், ரஹ்மான், காதர், ஸமத், கரீம், லத்தீப், சத்தார், ரஸ்ஸாக் என அழைப்பது பெரும் தவறு என உணர வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும் பொழுது உரிய முழுப்பெயருடன் அழைக்க வற்புறுத்த வேண்டும்.

"நபிமார்களின் பெயரைக் கொண்டும் பெயரிடுங்கள்" என்ற தாஹா நபி(ஸல்) அவர்கள் தம் அருமை பாட்டனார் செய்யிதினா இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் பெயரை தமது புதல்வருக்கு 'இபுராஹீம்' என பெயர் சூட்டினார்கள். எனவேதான் நாமும் உத்தம நபிமார்களின் பெயரை தம்பிள்ளைகளுக்கு வைப்பதுடன் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் பெயரான முஹம்மது, அஹ்மது, முஸ்தபா போன்ற பல சிறப்புமிகு பெயர்களையும் இணைத்து வைக்க வேண்டும் என ஆசை வைக்கின்றோம்.

## செல்லப்பெயர்கள்

உத்தம சஹாபாக்கள் தூய தியாகிகள், இறைநேசச் செல்வர்களின் பெயர்களையும் முன்னோர்களுக்கு இடப்பட்ட நற்பெயர்களையும் இடுவதும் 'நமது நல்ல மரபாக உள்ளது'. சில சமயம் பெரியார்களின் நல்ல பெயர்களை இட்டுவிட்டு பின்னர் அவர்களது சிறப்புப் பெயர்களாக இணைந்திருந்த ஆலிம் ஷா, மௌலானா எனவும் உறவுப் பெயரான முத்துவாப்பா போன்ற பெயர்களால் பலர் அழைக்கப்படுவதை பார்க்கலாம். சிலர் இதுவே இவர்கள் சிறப்புப் பெயர் என கருதிவிடுவதுண்டு. சில சமயம் இவர்கள் தவறு செய்யப்படும்போது ஆலிம் ஷா, குடிக்கிறார், பலாய் பேசுகிறார், மவுலானா சூதாட்ட கிளப்பில் பிடிபட்டார், முத்துவாப்பா ஹராமான தொழில் செய்கிறார் என பேசப்படும் நிலை ஏற்படும்போது அந்த சிறப்புப் பெயர் என்ன பாடுபடும் என சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இப்பெயருடையவர்கள் உரிய பெயரை வெளிப்படுத்தி பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

## சுருக்கப் பெயர்கள்

சிலர் பெயர்களை சுருக்கி, சாவன்னா, (ஷாகுல் ஹமீது), மம்மாத்துகாரு (முஹம்மது அப்துல் காதிர்), மைத்துகாரு (முஹ்யுத்தீன் அப்துல் காதிர்), மம்மீரா ஷா (முஹம்மது மீரா சாஹிப்) என அழைப்பதுண்டு. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும். சூட்டப்பட்ட அழகிய பெயர்களைக் கொண்டு அழைக்க வற்புறுத்த வேண்டும்.

அல்லாஹுத்தஆலா விரும்பக் கூடிய அண்ணல் ரஸூல் (ஸல்) அவர்கள் வழி காட்டலுக்கு ஏற்ற இஸ்லாமிய உணர்வு சிந்தனையில் பிள்ளைகளுக்கு பெயர்களை தெரிவு செய்வது பெற்றோரின் பிரதான பணியாக இருக்க வேண்டும். அரபி பெயர் என சொல்லி சரியான உச்சரிப்பை விளங்காமலும் அதன் அர்த்தத்தை தெரிந்து கொள்ளாமலும் பெயரிடுவது பின்னர் வருந்தக்கூடிய நிலை ஏற்படும். எனவே பெயரிடும் விஷயத்தில் மார்க்க ஞானமுடையவர்களிடம் கேட்டு சரி செய்து பெயரிடுவது . விபரீதங்களை தவிர்க்கக்கூடியதாக அமையும்.

## விபரீதப் பெயர்கள்

செய்யிதினா உமர் (ரலி) அவர்கள் ஒருவரிடம் 'உம் பெயர் என்ன? என்று வினவினார்கள். அதற்கு அவர் ஜம்ரத்துன் (தீப்பொறி) என்றார். 'நீர் யாருடைய மகன்? என்று வினவினார்கள். அதற்கு 'ஷிஹாபின்' (தீங்கங்கின்) மகன் என்றார். 'நீர் எக்கூட்டத்தைச் சார்ந்தவர்?' என்று வினவினார்கள். 'ஹர்கா' (தீ எரிப்பவர்) கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றார். 'உங்கள் இருப்பிடம் எது?' என வினவினார்கள். 'ஹர்ரதுன்னார்' (தீயின்கூடு) என்றார். 'எப்பகுதியில் வாழ்கின்றீர்?' என வினவினார்கள். 'ஸாதுள்ளலா' (கொழுந்து விட்டெரியும் தீ) என்றார். உடனே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை நோக்கி 'உம்முடைய குடும்பத்தினரை, உற்றார் உறவினரைச் சென்று பாரும். அவர்களெல்லாம் எரிந்து சாம்பலாகிவிட்டார்கள்" என்று கூறினர். உண்மையில் அவ்விதமே ஆகி இருந்தது (முஅத்தா).

இவ்வரலாற்று நிகழ்ச்சி தீய பெயர்களின் விளைவை நமக்கு சிந்திக்கத் தூண்டுகிறது.

## பட்டப்பெயர்கள்

சில பகுதிகளில் அர்த்தமற்ற பட்டப்பெயர்களை இட்டு பரிகாசமாக அழைத்த பின்னர் அதுவே அவர்களது குடும்பப் பெயர்களாகவே தொடர்ந்துள்ளதை கண்டுள்ளோம். சில செயல்களினாலும் பெயர்கள் சூட்டப்பட்டு நிலைத்து விடுகின்றன. சில ஊர்களில் குடும்பப் பெயர்களாக "இழக்கச் சாமான் வீடு, பேயாட்டி வீடு, பாம்பாட்டி வீடு என்றெல்லாம் சொல்லப்படுவதைக் கேட்டுள்ளோம்

பலருக்கு வேடிக்கையான பெயர்கள் கூட தொடர்ந்து நேரிடையாகவும் மறைமுகமாகவும் தொடர்வதைப் பார்க்கிறோம். இந்நிலை அகற்றப்பட வேண்டும்.

"பிள்ளைக்கு பிறந்த ஏழாம் நாளன்று அதற்குப் பெயரிடுங்கள்" என அஹ்மது நபி (ஸல்) அவர்கள் போதித்ததன் மூலம் பிள்ளை பிறந்த பின் அழகிய பெயர் பற்றி சிந்தித்து தேர்வு செய்ய அந்த ஒருவார கால அவகாசத்தை பயன்படுத்தி பெயரிட வேண்டும்.

## நிலையான பெயர்கள்

ஒரு சகோதரர் தன் மகனுக்கு பெயர் சூட்ட அழைத்ததுடன் தனது தந்தையின் அழகிய பெயரான 'அப்துல் கரீம்' என்ற பெயருடன் புதிய அரபி பெயரையும் தேர்வு செய்து கேட்டபோது நாம் அச்சகோதரரிடம் "உமது தந்தையின் இப்பெயருடன் புதிய அரபிப் பெயர் சேர்க்கப்பட்டால் உமது தந்தையின் பெயர் மறக்கப்பட்டு புதிய பெயரால் அழைக்கப்பட வேண்டிய நிலையே ஏற்படும்' என ஆலோசனை கூறிய போது அதை ஏற்று, பின் அப்துல் கரீம் என பெயர் சூட்டப்பட்டது.

மற்றொரு சகோதரர் ஒருவர் தமது தந்தை (அபூதாஹிர்) பெயருடன் மற்றொரு பெயரையும் தேர்வு செய்து கேட்டபோது பிரபல நபித்தோழர் ஸல்மான் (ரலி) அவர்களது பெயரை இணைத்து 'ஸல்மான் தாஹிர்' என சிபாரிசு செய்த போது அதன்படியே பெயர் வைத்தார்.

75 பேர் சத்திய இஸ்லாத்தை தழுவிய நேரத்தில் அவர்களில் பலருக்கு பெயர் சூட்ட வாய்ப்பு அமைந்த நேரத்தில் சிலருக்கு அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான் எனவும் சிலருக்கு நபிமார்களின் பெயர்களையும் வேறு சிலருக்கு சஹாபா பெருமக்களின் பெயர்களையும் சூட்டப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். இவைகளை சூட்டிக் காட்டுவதன் நோக்கம் பெயர் சூட்டவோ, அதற்கான ஆலோசனை வழங்கவோ வாய்ப்பு கிடைக்கிறபோது இஸ்லாமிய நெறியுடன் அழகிய பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதற்காகவே.

நல்ல பெயருடன் நற்பேறு பெற்று நல்லோர்களாய் நன்னெறியில் வாழ எல்லாம் வல்ல ரஹ்மான் அருள் புரிவானாக!

மணிச்சுடர் 8-11-96